செய்தி வெளியீடு எண்: 22 நாள்: 16.05.2018.

***தேனி மாவட்டம்,***
***உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட முத்துலாபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 21 பயனாளிகளுக்கு ரூ.2,54,621/- மதிப்பிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-***

******

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட முத்துலாபுரம் கிராமத்தில் (16.05.2018) இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வருவாய்த்துறையின் சார்பில், விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.72,000/- மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்களையும், மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பயனாளிகளுக்கு ரூ.1,56,000/- மதிப்பீட்டில் மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.4,000/- மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.15,000/- நீர் கடத்தும் குழாயினையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.3,386/- மதிப்பிலான தையல் இயந்திரத்தினையும், விலையில்லா தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.4,235/- மதிப்பிலான தேய்ப்பு பெட்டியினையும் என மொத்தம் 21 பயனாளிகளுக்கு ரூ.2,54,621/- மதிப்பிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளையும், மேலும், வருவாய்த்துறையின் சார்பில் நத்தம் வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 22 பயனாளிகளுக்கு நத்தம் வீட்டுமனைப்பட்டாவிற்கான ஆணையினையும், பட்டா மாறுதல் வழங்கும் திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 19 பயனாளிகளுக்கு தொழிலாளர் நல வாரிய அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பயன்களை வழங்கி தெரிவிக்கையில், மக்கள் தொடர்பு முகாம் என்பது துறை ரீதியான அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் ஒரு கிராமத்தை தேர்வு செய்து அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்குவது மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும். ஒரு மனிதன் கல்வி கற்பதன் மூலம் தான் மட்டுமல்லாமல், தன்னைச் சார்ந்த குடும்பமும் முன்னேற்றம் அடைவதற்கு வழிவகை ஏற்படும். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை கல்வி கற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசு கல்வியின் முக்கியத்துவம் கருதி, ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழக அரசு விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டு, எண்ணற்ற வேளாண் சார்ந்த திட்டங்களை தீட்டி செயலபடுத்தி வருகிறது. அதனடிப்படையில், தமிழக அரசு நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்திட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத அரசு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத அரசு மானியமும், கூட்டுப்பண்ணைத்திட்டத்தின் கீழ் விவசாய ஆர்வலர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு வேளாண் பணிகளுக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு தங்களது சொந்த பகுதியிலிருந்தே இணையதளத்தின் வாயிலாக பொறியியல் படிப்பிற்கு முன் பதிவு செய்யும் வசதியினை ஏற்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான பொறியியல் மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்கான முன் பதிவினை இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் அரசு பொறியியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

புதிய தொழில் புரிய விருப்பமுள்ளவர்கள் சந்தையில் பொருளுக்கான தேவை என்ன, பொருளின் முக்கியத்துவம் அறிந்து அதன் விற்பனை இடங்கள், உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களை கண்டறிந்து குறைந்த செலவில் எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை கணக்கிட்டு தொழில் தொடங்கிட வேண்டும். புதிய தொழில் முனைவோர்களுக்கு வங்கிகளே தனியாக பயிற்சி அளித்து வங்கிக்கடனாக நீட்ஸ் திட்டத்தின் மூலம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை 25 சதவீத மானியத்தில் கடனுதவியும் அளித்து வருகிறது. வங்கிக்கடன் பெற்ற தொழில் முனைவோர்கள் முறையாக வங்கிக்கடனை திருப்பிச் செலுத்தும் போது எதிர்காலத்தில் உங்களுடைய தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நிதியினை வங்கிகள் அளிக்க முன் வரும்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு மாதந்தோறும் மகளிர் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்து மாதந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று, தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கொண்டு பொதுமக்கள் தங்கள் வாழ்வில் வளம்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.முகம்மது அப்துல் நசீர் அவர்கள், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சென்னியப்பன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.கிருஷ்ணவேனி அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி.ராஜராஜேஸ்வரி அவர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி ஜெயசீலி அவர்கள், மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு.ராமசுப்பிரமணியன் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**